Master of Arts: 2011-2012
The Influence of Islam in the western civilization ISC-605

# தற்கால மேற்கின் கருத்து கட்டமைப்பு போன்ற அனைத்திலும் இஸ்லாத்தின் செல்வாக்கு காணப்படுகின்றது பரிசீலிக்குக!

மாணவர் பெயர்: எம். ஜே. எம். ரிஸ்வான்

பதிவு இலக்கம்: HD/ MA/ 08-09-/559

விரிவுரையாளர் : எம். ஐ. எம். ஜஸீல் (PHD)

(அரபு இஸ்லாமிய நாகரீகத்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)

# முன்னுரை

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ் ஒருவனுக்கே புகழ் அனைத்தும் சொந்தமானது. அவனது அருளும், சாந்தியும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும், அவர்களின் வழி நடக்கும் அனைவர் மீதும் உண்டாகட்டுமாக!

அரேபிய தீப கற்பத்தில் இஸ்லாமியச் சுடர் வெளியானது முதல் உலகம் பல பயன்பாடுகளைக் கண்டது. ஷிர்க் எனும் கொடிய காரிருளில் இருந்து சுவனப்பதைக்கு அது கொணடு செல்லப்பட்டது. இஸ்லாம் வெளிப்பட்டு ஐம்பது ஆண்டுகளில் இஸ்லாமிய சமூகம் கிழக்கால் இந்தியா, பாரசீகம் முதல் அட்லாண்டிக் சமுத்திரம் வரையும் மேற்கால் வட ஸ்பைன் வரையும் சென்றடைந்தது.

மதீனா, கூ.:.பா, திமஷ்கஸ், பக்தாத், பஸரா, சமர்கந்து, கெய்ரோ, கிர்னடா, கொர்தோவா, டொலிடோ போன்ற முக்கிய நகரங்கள் இஸ்லாமிய கலாச்சாரத்தின் மத்திய நிலையங்களாக விளங்கின. அத்துடன், இஸ்தானா (உஸ்மானியர் வாசஸ்தலம்), கொஸ்தான்ந்திநோபிள் உட்பட மேலும் பல இஸ்லாமிய நகரங்கள் இவற்றுடன் இணைந்து கொண்டன.

இவ்வளவு குறுகிய காலத்தில் எந்த ஒரு சமூகமும் அடைந்து கொள்ளாத நாகரீகப் பண்பாட்டை முஸ்லிம்கள் அடைந்து கொண்டார்கள். இவர்களின் நாகரீகப் பண்பாடு ஆய்வுகள், மருத்துவம், வானியல், புவியில் என அனைத்து துறைகளிலும் பல நூற்றாண்டுகள் பன்நெடுங்காலமாக உலகின் நாலா திசைகளிலும் ஒளி ஊட்டியது.

இன்று நவீன உலகின் நாகரீகத்தைக் கண்டு மனிதர்கள் வியப்பது போன்று அன்று இஸ்லாமிய நாகரீகம் கண்டு வியப்படைந்தனர். இஸ்லாமிய நாகரீகத்தில் இருந்து ஊற்றெடுத்ததுதான் இன்றைய நாகரீகம் என்பார்கள். மத்திய காலப்பகுதி இஸ்லாமிய எழுச்சியின் முக்கிய பகுதியாக வர்ணிக்கப்படுகின்றது.

ஸ்பைனில் 800 ஆண்டுகள் இஸ்லாமிய ஆட்சியின் போது நாகரீகத்தின் உச்சத்தை முஸ்லிம்கள் மாத்திரம் நுகரவில்லை. மாற்றமாக இருளில் மூழ்கிக் கிடந்த ஐரோப்பாவும், அதன் பிரஜைகளும்தான் நுகர்ந்தார்கள்.

கி.பி பதினெட்டாம் நூற்றாண்டுவரையும் இஸ்லாமிய அறிஞர்களின் நூல்கள் ஐரோப்பிய பல்கலைக்கழகங்களில் பாடப்போதனையாக நடத்தப்பட்டு வந்துள்ளன என்று ஐரோப்பியர்கள் சாட்சியம் கூறுகின்றார்கள்.

1980 ம் ஆண்டு வெளியான யுனிஸ்கோ பத்திரிக்கையின் ஒக்டோபர் மாத பத்திரிக்கை இவ்வாறு குறிப்பிட்டுள்ளது **'இப்னு சீனாவின் கெனன் (கானூன்) என்ற நூல் 1909 வரை புரோக்ஸல் பல்கலைக்கழகத்தில் பாடப் புத்தகமாகப் படிப்பிக்கப்பட்டு வந்தது.**

கலாநிதி ஓஸ்லர் என்பவர் பின்வருமாறு குறிப்பிட்டார். **' மருத்துவத்துறையில் எழுதப்பட்ட மற்ற நூல்களை விடவும் கானூன் புத்தகமானது நீண்ட காலங்கள் வாழ்ந்துள்ளது. பதின் ஆறாம் நூற்றாண்டின் பின் வந்த முப்பது ஆண்டுகளில் ஐந்து தடவைகளுக்கும் அதிகமாக அது அச்சிடப்பட்டுள்ளது. இப்னு சீனா மேற்கத்தேய அறிஞர்கள் கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டு தொடங்கி, கி.பி பதினேழில் அதன் உச்சத்தை தொட்ட அறிவியல் ஆராய்ச்சிப்புரட்சிக்கு வித்திட்டார்'**

அவ்வாறான விரிவான செல்வாக்கை கொண்ட ஐரோப்பாவில் இன்றும் அது காணப்படுகின்றது என்பதே உண்மை.

மேற்கில் இஸ்லாத்தின் செல்வாக்குப் பற்றி முன்வைக்கும் அரபு அறிஞர்களின் தழுவலாகவே **"தற்கால மேற்கின் கருத்து கட்டமைப்பு போன்ற அனைத்திலும் இஸ்லாத்தின் செல்வாக்கு காணப்படுகின்றது பரிசீலிக்குக!** என்ற ஆய்வுத் தலைப்பை அணுகி உள்ளேன். அதை பின்வரும் தலைப்புக்களில் வகுத்துள்ளேன். பூரணத்துவம் என்பது அல்லாஹ்வுக்குரியதாகும். குறைகளும், தவறுகளும் மனிதர்களின் பண்பாகும். இதன் நிறைவுக்கு அல்லாஹ்வைப் புகழ்வதோடு குறைகள், தவறுகளுக்கு அவனிடம் மன்னிப்புக் கோருகின்றேன்.

## *இவ்வாய்வின் உள்ளடக்கம்:*

- ✔ முன்னுரை
- ✔ **இஸ்லாம் ஐரோப்பாவை சென்றடைந்த வழிகள்.**
- ✔ இஸ்லாமிய வெற்றி ஐரோப்பாவிற்கு பெற்றுத்தந்த நன்மைகள்
- ✔ **இஸ்லாமிய செல்வாக்கை முன்னெடுக்க ஏதுவான காரணிகள்**
- ✔ **மேற்கின் கருத்து கட்டமைப்பில் காணப்படும் இஸ்லாமிய செல்வாக்கு**
- ✔ **இஸ்லாமும் ஜனநாயகமும்**
- ✔ **இஸ்லாத்தில் பார்வையில் சட்டம்**
- ✔ **இஸ்லாத்தில் மனித உரிமை**
- ✔ **நபிகள் நாயகத்தின் ஹஜ்ஜதுல் வதா மனித உரிமைப்பிரகடனம்.**
- ✔ முடிவுரை
- ✔ உசாத்துணைகள்.

## இருளில் மூழ்கிக்கிடந்த ஐரோப்பா

வரலாற்று ஆசிரியர்கள் ஐரோப்பாவை முக்கிய மூன்று காலகட்டங்களாகப் பிரித்து நோக்குகின்றனர்.

- ஆரம்பகால ஐரோப்பா
- மத்தியகால ஐரோப்பா
- இறுதிக்கால ஐரோப்பா (1)

கி.பி. 500 முதல் 1500 வரையான காலப்பபகுதி ஐரோப்பாவின் இருண்ட காலம் என வர்ணிக்கப்படுகின்றது. நாகரீகம், பண்பாடு என்பது அற்றுப்போய் மனித உரிமைகள் பறிக்கப்பட்டடு நிலமாணிய நில பிரபுத்துவமுறையால் ஐரோப்பா சீரிழிந்து சின்னா பின்னப்பட்டுக் கிடந்தது.

கி.பி ஏழாம் நூற்றாண்டு முதல் இஸ்லாமியச் சுடரையும் அதன் பண்பாட்டையும் அந்தலூஸிய வழியாகவும், பின்னர் செசிலித் தீவு வழியாகவும் அது நுகர ஆரம்பிக்கின்றது. சிலுவைப்போர்கள், அவற்றிற்கு முன்னர் முஸ்லிம் நாடுகளுக்கும் ஐரோப்பாவிற்கும் இடையில் காணப்பட்ட தூதரகங்கள் மூலமும் ஐரோப்பா அனுபவ ரீதியாக இஸ்லாம் நாகரீகத்தைக் காண ஆரம்பிக்கின்றது. இதில் ஐரோப்பிய நகரங்கள் அனைத்தும் சம நிலையில் காணப்படவில்லை. மாற்றமாக சில நகரங்கள் பாரிய செல்வாக்கிற்கு உள்ளானது அதில் அந்தலூஸியா முக்கிய நகரமாகும். அதன் பின்னர் செசிலித்தீவு காணப்படுகின்றது. (1)

இஸ்லாமிய வெற்றிக்கு முன்னால் ஐரோப்பியர் வறியவர்களாகவும், விவசாயிகளாகவும், அவர்கள் தமது நிலப்பரப்பில் அரைவாசியைக் கூட விவசாயம் செய்து கொள்ள வசதி அற்றவர்களாக இருந்தனர்.

ஐரோப்பா காடுகள் சதுப்பு நிலங்களாகவும் காணப்பட்டன. போர்கள் காரணமாக சனத்தொகை குறைந்தவர்களாகவும் இருந்தனர். ஒருவரின் சராசரி வயது எல்லை முப்பதை தாண்டுவதும் கடினம். நோய்கள், பட்டிச் சாவுகள் அதிகரித்துக் காணப்பட்டது. அவர்களில் 20% (இருபது வீதத்திற்கும்) குறைவானோர் பதின்ஆறு கி.மி தொலை தூரத்திற்கு அப்பால் தமது சொந்த ஊரைவிட்டும் கடந்து பயணம் செய்வதில்லை. மேற்கு ஐரோப்பாவைச் சேர்ந்த மக்கள் மூன்று பிரிவுகளாகக் காணப்பட்டனர்.

1- பிரபுக்கள். ஆட்சித்தலைவர்கள். (தலைகளுக்கு கிரீடம் அணிந்து போரை வழிநடத்துபவர்கள்)
2- கிரிஸ்தவ கோவில்களின் சேவர்களான சமயவாதிகள்
3- விவிசாயிகள் (2)

--------------------

1- http://www.qeyamhome.net/details.aspx?pageid=1920&lasttype=2

2- – ويكيبيديا – **العصور الوسطى**ar.wikipedia.org/wiki/عصور_وسطى

## இஸ்லாம் ஐரோப்பாவை சென்றடைந்த வழிகள்.

1- இஸ்பைன். அந்தலூஸியா

2- செசிலித் தீவு

3- (1907- 1290) வரையான காலப்பகுதியில் காணப்பட்ட சிலுவைப் போர்கள்

4- மொழி பெயர்ப்புக் குழு (1) இந்த நான்கு வழிகளுடன் சிலர் :

5- வர்த்தகம்,

6- ஐரோப்பிய நாடுகளின் தூதரகங்கள் என்பவற்றையும் குறிப்பிடுகின்றனர்.

இஸ்லாமிய கலாசாரம் ஸ்பைன் தீவுக்குள் அதன் வடஇராச்சியங்களின் ஊடாகச் சென்றது. அதன் மலைத் தொடர்கள் கிரிஸ்தவர்களின் பாதுகாப்பு அரணாகவும் காணப்பட்டது. அவர்கள் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வாழவேண்டும் என்ற நிலையில் இருக்கவில்லை. ஸ்பைனில் இஸ்லாத்தை ஏற்றவர்கள், அரபுக்கள் ஆகியோருக்குப் பிறந்த புதிய பரம்பரையால் முஸ்லிம்களின். காலப்போக்கில் குடிசன மதிப்பீட்டில் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்டது. (2)

'ஸ்பைன் மீதான முஸ்லிம்களின் படை எடுப்பானது எதிரும் புதிருமான இரண்டு சிந்தனைகளைத் தோற்றுவித்ததாகக் கூறப்படுகின்றது. ஒன்று தீவிரவாத கிரிஸ்தவ மதச் சிந்தனை, மற்றொன்று அறிவைத்தேடல் வேட்கை. இது அரபுக்களின் கலாசாரம் பற்றி ஆராய ஐரோப்பியத்தூண்டியது… ' கிஸ்டைல் மன்னன் மூன்றாம் அல்ஃபொன்சோ கி.பி. 1085 ஆண்டு பல மில்லியன் அளவில் காணப்பட்ட அரபு இலக்கிய, அறிவியல் மற்றும் மருத்துவ கை எழுத்துப் பிரதிகளை மொழியாக்கம் செய்யுமாறு பணித்தார் என்றும், கொர்தோவாவின் பிரதான நூலகத்தில் ஐந்து இலட்சம் அரபு நூல்கள் காணப்பட்டன என்றும் ஒரு குறிப்பு குறிப்பிடுகின்றது. இவை முதலாவதாக கெஸ்தைல் மொழிக்கு சாதாரண நடையில் மொழியாக்கம் செய்யப்படும், பின்னர் தெளிவான இலத்தீன் மொழிக்கு மொழியாக்கம் செய்யப்படும். அவ்வாறே (கி.பி.1125-1151) வரை ஆட்சி செய்த கெஸ்டைல் மன்னர் ரீமோன் என்பவன் அறிவுத்தாகம் உடையவனாகக் காணப்பட்டான். அவன் பல அரபு நூல்களை இலத்தீன் மொழிக்கு மொழிமாற்றம் செய்யுமாறு பணித்தான் என்றும், அவர்களின் இஸபெல்லாவைச் சேர்ந்த யோவான் அரபு மொழியில் இருந்து கெஸ்டைல் மொழிக்கு மொழி பெயர்க்கும் பணியில் முக்கிய மொழிபெயர்ப்பாளராக இருந்தார் என்றும் ஒரு குறிப்பு குறிப்பிடுகின்றது (3)

முஸ்லிம் படைகள் ஐரோப்பாவில் மேற்கொண்ட உயர்ந்த வழிமுறையால் ஐரோப்பா கவரப்பட்டது. தமது ஆட்சியாளர்களின் அடக்கு முறைகளில் இருந்து விடுதலை பெற்று சுதந்திரிமாக நடமாட இஸ்லாம்தான் தீர்வு என ஐரோப்பியர் கண்டனர். அதனால் இஸ்லாத்தை தழுவினர்.

-------------

1- (41 / 23) – مجلة الجامعة الإسلامية بالمدينة المنورة

2- http://asirdabe.blogspot.com/2010/08/blogpost_3326.htm

3- الإسلام والآخر هو الحل لحمدي شفيق (93/1)

## இஸ்லாமிய வெற்றி ஐரோப்பாவிற்கு பெற்றுத்தந்த நன்மைகள்

இருள், வறுமை, கோத்திர சண்டைகள், அரசுகளின் நெருக்கடி என பலவழிகளிலும் அடிமைப்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்ட ஐரோப்பா சுதந்திரத்தின் காற்றையும் விடுதலையின் உண்மை நிலையையும் முஸ்லிம்களின் வெற்றிகளின் பின்னரே சரியாக அனுபவித்தது.

“முஸ்லிம்கள் ஹிஜ்ரி முதலாவது நூற்றாண்டின் இறுதியாகின்ற போது ஐரோப்பாவை வந்தடைந்தனர். ஐபீரியாவின் தீவையும், ∴பிரான்ஸின் தென்பகுதியையும் மத்திய தரைக்கடலையும், இத்தாலியின் தென்பகுதியையும் வெற்றி கொண்டு அங்கு நிலைகொண்டதோடு, இஸ்லாமிய மார்க்கத்தையும் அந்த பிரதேசங்களில் பரவச் செய்தனர். பர்பரிய இனத்வர்கள் மேற்கு ரோமர்களின் பிடுயில் இருந்து ஐரோப்பாவை மீட்டெடுத்து அங்கு அதிகாரம் செலுத்திக் கொண்டிருந்தனர். ஐரோப்பா நாகரீகம் பண்பாடு என்ற இலக்கணத்தில் இருந்து மிகத்தூரமாகவே காணப்பட்டது. இதற்குள் இவர்கள் கிரஸ்தவ மதம் சார்ந்தவர்களாக இருந்தனர். பாப்பரசுருக்கு எதிராகப் பேசுவது, கேள்வி கேட்பது பாவம் எனப் பிரச்சாரம் செய்யப்பட்டு ஆண்மீக ஆதிக்கத்தின் பெயரால் மக்கள் ஆளப்பட்டனர். இதுவும் அவர்களை நாகரீத்தை நோக்கிப் பயணிப்பதை பின் தள்ளியது. மட்டுமின்றி மக்கள் மிருகங்களைப் போன்று நடாத்தப்பட்டார்கள். முஸ்லிம்கள் ஐரோப்பாவின் சந்து பொந்துகளெல்லாம் இஸ்லாத்தையும் அதன் அறிவியல் பாரம்பரியத்தையும் பரப்பினர், **நீதி, சமத்துவம் என்ற பண்பாடுகளைக் கடைப்பிடித்தனர். வேற்றுமைகள், வேறுபாடுகளை முடிவுக்கு கொண்டு வந்தனர். அனைத்து தரப்பினரும் சுதந்திரத்துடன் நடமாடும் உத்தரவாதத்தைப் பெற்றுத் தந்தனர். அடக்கு முறையையும், ஆணவத்தையும், பிறர் மீது உரிமை இன்றி அத்துமீறுவதையும் தடுத்தி நிறுத்தினர்.**

அதனால்தான் இஸ்லாமிய ஸ்பைனின் வரலாறு மனித வரலாற்றில் ஒளிர் வீசிய வரலாறு என்று வர்ணிக்கப்படுகின்றது. முஸ்லிம் ஸ்பைனில் இஸ்லாமிய நாகரீகம், பண்பாடு பட்டி தொட்டி எல்லாம் பரவிக்காணப்பட்டதால் அது கலாசார, நாகரீகங்களில் மத்திய நிலையமாக விளங்கியது” (1)

-------------------

1- (49 / 23) – مجلة الجامعة الإسلامية بالمدينة المنورة

## இஸ்லாமிய செல்வாக்கை முன்னெடுக்க ஏதுவான காரணிகள்

**(அ) அரபு மொழி.**

அரபு மொழி இஸ்லாமிய சமயத்தினதும், முஸ்லிம்களினதும் பிரதான மொழியாகும். அப்பாஸியர் காலத்தில் அரபு மொழிக்கென்று தனியான இடம் தரப்பட்டிருந்ததை கிரேக்க, இலத்தீன் மொழிகளில் காணப்பட்ட நூல்கள் அரபு மொழிக்கு மொழியாக்கம் செய்யப்பட்டது. இப்னு சீனா, ராஸி, இப்னு ந.்.பீஸ் போன்ற அறிஞர்களின் நூல்கள் ஐரோப்பிய பல்கலைக்கழகங்களில் கி.பி 18ம் நூற்றாண்டு வரை போதிக்கப்பட்டிருப்பது ஆய்வுகளில் சுட்டிக்காட்டப்படுகின்றது.

**(ஆ) மதம்- சமயம்**

மதம் என்பது மனிதனை அநீதி, அக்கிரமம், பேதமுரண்பாடுகள் போன்றவற்றில் இருந்து விடுதலை செய்து அவனை சுதந்திரமானவனாக வாழச் செய்ய வேண்டும்.

அவன் தன்னைப்படைத்த அல்லாஹ்வை மாத்திரம் கட்டுப்பட்டு அவனுக்கு அடிபணிந்து வாழ வேண்டும். அவனைப்போன்று ஒரு மனிதனுக்கு அவன் சிரம் பணிதல் என்பது அவனது சுதந்திரம் பறிக்கப்பட்டதற்கு சமமாக இஸ்லாம் பார்க்கின்றது. அதில் இருந்து மக்களை விடுதலை செய்து சீரிய வழியைக் கொடுத்தது. சிந்திக்கின்ற திறனை வளர்த்து விட்டது. அதுவும் ஐரோப்பாவில் இஸ்லாமிய செல்வாக்கின் முக்கிய பகுதியாகும்.

இந்த சமத்துவ சிந்தனையால் பொருளாதார ரீதியாக, அறிவியல் ரீதியாக, சமூக ரீதியாக பரிபூரணமான ஒரு சமூக அமைப்பை அரபு முஸ்லிம்களால் ஐரோப்பாவிற்கு வழங்க முடியுமாக இருந்தது. (1)

அதேவேளை இத்தாலியில் இருந்து முஸ்லிம் உலகின் மீது மதத்தின் பெயரால் தொடுக்கப்பட்ட சிலுவைப் போர்கள் ஐரோப்பியர் வாழ்வின் மறுமலர்ச்சியிலும், இஸ்லாமிய செல்வாக்கின் தாக்கத்திலும் பாரிய தாக்கத்தை உண்டு பண்ணியதை வரலாற்றில் பார்க்கின்றோம்.

முஸ்லிம்கள் உலகில் செல்வாக்குள்ள மத்திய பகுதியில் வாழ்ந்ததால் சிலுவைப் போராளிகளான ஐரோப்பியருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஏற்பட்ட உரசல்கள் முஸ்லிம்களின் வழக்காறுகள், அரேபியரின் சொற்பிரயோகங்கள் பற்றி அறிந்திட வாய்ப்புக்கிட்டடியது. போர் தந்திரங்கள், தொலைத் தொடர்பு மற்றும் போக்குவரத்து வழிகளை அங்கு எடுத்துச் சென்றனர். நவீன குளியல் அறைகள், படுக்கை விரிப்புக்கள், நகரப் பாதுகாப்பு, மற்றும் விவசாய உற்பத்தி பொருட்கள், எள்ளு, விதைவகைகள், வித்துக்கள், தாவரக் கொட்டைகள், மற்றும் தேசிக்காய், அரசி, பருப்பு போன்ற பொருட்களும் ஐரோப்பிய கலாசாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

-------------------

1-http://www.qeyamhome.net/details.aspx?pageid=1920&lasttype=2

## (இ) அந்தலூஸியாவில் காணப்பட்ட இஸ்லாமிய சர்வகலாசாலைகள்

ஐரோப்பாவின் மூலை முடுக்குகளில் இருந்ததெல்லாம் மாணவர்கள் அந்தலூஸியாவை நோக்கி கல்விக்காகப்புறப்பட்டனர். கிரிஸ்தவ மதகுருக்கள் அரபு மொழியைக் கற்றனர். கொர்தோவா நூல் நிலையத்தில் காணப்பட்ட அரபு இலத்தீன் மொழியாக்கத்தில் காணப்பட்ட பைபிளை இஸபெல்லாவின் பிரத மதகுருவான யோவான் கி.பி. 764 ஆண்டு அரபு மொழிக்கு பைபிளை மொழிமாற்றம் செய்தார். அவ்வாறே தந்தை விசாண்டி என்பவர் கிரிஸ்தவ தேவாலயங்களின் சட்டவிதிகளை அரபு மொழிக்கு மாற்றம் செய்து, பிரதமமதகுருவான அப்துல் மலிக் அவர்களிடம் கவிதைகளில் அவற்றை ஒப்படைத்ததாகக் கூறப்படுகின்றது. (1)

முஸ்லிம்களின் ஆட்சியில் இலத்தீன் மொழியிலான நூல்களை மொழிபெயர்ப்புச் செய்வது முக்கியமான தொரு இடத்தை வகித்தது. அதற்கு حركة الترجمة தர்ஜுமா இயக்கம் என்ற பெயரில் சொல்லப்பட்டது. அது இலத்தீன் மொழியில் காணப்பட்ட நூல்களை அரபுக்கு மொழி மாற்றம் செய்ததால் அரிஸ்டோடில், ஜாலீனோஸ், பிளேட்டோ போன்றவர்களின் தத்துவக் கருத்துக்கள் வீண்போவதில் இருந்து பாதுகாத்தது.

**மட்மின்றி இஸ்லாமிய நாகரீகம், பண்பாடு ஆகியவற்றைத் தெரிந்து வருவதற்காக தூதுக்குழுக்களை அரசர்கள் அனுப்பிய பல நிகழ்வுகள் நடை பெற்றுள்ளன.**

முஸ்லிம் ஸ்பைன் ஆட்சியில் இவ்வாறான நிகழ்வுகள் சர்வசாதாரணமாக நடந்துள்ளன. பவேரியா ∴பிலிப் மன்னன் கொர்தோவவாவில் காணப்படும் நாகரீக எழுச்சி பற்றி ஆய்வு செய்திடவும், அங்குள்ள திட்டங்கள் பற்றி கேட்டறியவும் உமைய்யா ஆட்சியாளரான முதலாவது ஹிஷாமை (கி. 711-750) சந்திப்பதற்கு அனுமதி வேண்டினார். அதற்கு அவரது வேண்டுதலை ஹிஷாம் ஏற்றுக் கொண்டு பதில் அனுப்பினார். வில்மீன் என்பவரது தலைமையில் தூதுக்குழுவை அனுப்பினார். இவர் நம்பிக்கையான ஒருவர். முஸ்லிம்களின் பண்பாட்டு நாகரீக வளர்ச்சி பற்றி ஒழிவு மறைவின்றி எடுத்துக்கூறும் பண்பாளர். அதனால் வில்யம் அல்அமீன் என முஸ்லிம்களால் அழைக்கப்பட்டார். இதன் பின்னர் அந்தலூஸியாவை நோக்கி ஐரோப்பியர்கள் தூதுக்குழுக்களாகப் படை எடுத்துச் சென்றனர்.

கி.பி எட்டாம் நூற்றாண்டு இங்கிலாந்து மன்னனின் மன்னன் தனது சகோதரனின் மகள் டோண்ட் என்பவரது தலைமையில் இளவரசர்களின் பெண்மக்களில் எட்டு இளம் யுவதிகளை இஸபெல்லா நகருக்கு அரண்மணைத் தலைவர் ஸ்பெலீக் என்பவரோடு அனுப்பியதோடு உமைய்யா கலீ∴பா ஹிஷாமுக்கு மடலும் கொடுத்தனுப்பியதாக வரலாறு குறிப்பிடுகின்றது. (2)

---------------------------

-1- https://ar.wikipedia.org/wiki/

2- http://uqu.edu.sa/page/ar/175797

**(ஈ) முஸ்லிம் ஆட்சியின் சிறப்பம்சங்கள்.** (எளிமை, நீதி, சமத்துவம், சிறுபான்மையினர் உரிமைகள் பேணுதல், மத சுதந்திரம்) போன்ற உரிமைகள் பெற்றுத்தரப்பட்டதும் முக்கியமான ஒன்றாகும்.

முஸ்லிம்கள் மத்தியில் காணப்பட்ட நீதி சமத்துவம், பாதுகாப்பு போன்ற இன்னோரன்ன அம்சங்கள் இஸ்லாமிய செல்வாக்கில் பாரிய பங்களிப்புச் செய்தன. ஐரோப்பாவை கிரிஸ்தவம் ஆட்சி செய்த போது காணப்பட்ட பதட்டமான சூழ் நிலையோ, வரிச்சுமைகளோ, கோத்திர முரண்பாடுகளோ முஸ்லிம் ஆட்சியில் காணப்படவில்லை.

முஸ்லிம் ஆட்சி நீதி, சமத்துவம், சமாதானம் நிறைந்ததாகக் காணப்பட்டதோடு, பிற மதத்தவர்களின் உரிமைகளைப் பேணுகின்ற முன்மாதிரிமிக்க ஆட்சியாக விளங்கியது. அதுவும் ஐரோப்பிய சமூகத்தில் இஸ்லாமிய செல்வாக்கைப் பெற்றுத் தந்தது. முஸ்லிம் படைகள் தமது பிரதேசத்தை வெற்றி கொள்ள எப்போது வரும், தமக்கு மத சுதந்திரமும், கொடிய ஆட்சியாளர்களில் இருந்து விடுதலையும் கிடைக்குமே என்று ஏங்கிக் கொண்டிருந்த மக்களும் இருந்தனர்.

## மேற்கின் கருத்து கட்டமைப்பில் காணப்படும் இஸ்லாமிய செல்வாக்கு

### அரபு மொழி இலக்கியமும்

ஒரு காலத்தில் மேற்கிலுள்ளோர் முஸ்லிம் நாடுகளை நோக்கிப் படை எடுத்தனர். அங்குள்ள நிர்வாக முறைகள், தேசிய உற்பத்திகள், விவசாயம், கல்விப் போதனை அனைத்தையும் உற்று நோக்கினர். அவர்களின் மொழியான அரபு மொழி கற்றாலே அன்றி எதுவும் ஆகாது என்ற முடிவில் அரபைக் கற்றனர். பின்னர் அதில் இருந்து தமது மொழிகளுக்கு மொழமாற்றம் செய்து செய்து பயன் பெற்றனர்.

அதன் தாக்கம் கி.பி பதினொராம் நூற்றாண்டு முதல் காணப்பட்டதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. ஐரோப்பியர் அரபு இலக்கயத்தை ரசிப்பதே இதற்கு காரணமாகும். அதில் காணப்படும் காதல் மற்றும் புகழ்பாட்டுக்களையும் அந்தலூஸிய உணர்ச்சிக்கவிதைகளையும் அவர்கள் அதிகம் நேசித்தது மற்றொரு காரணமாகும்.

ஸ்பைன், பிரான்ஸ், ஜேர்மன் போன்ற நாடுகளில் இதன் செல்வாக்கு காணப்பட்டது. சமூகவியல், குடும்பவியலில் காணப்படும் தாக்கத்தை நன்கு உணர்ந்த ஐரோப்பியர்கள் இப்னு ஹஸ்ம் போன்ற அறிஞர்களின் கருத்துக்களால் பெரிதும் கவரப்பட்டனர்.

அரபு மொழியில் வெளிவந்த (**ألف ليلة وليلة**) ஆயிரம் இரவுகள் கதைத் தொடர் ஐரோப்பாவில்

பல தடவைகள் அச்சிடப்பட்டிருப்பது இதை இன்னும் உறுதி செய்கின்றது. அவ்வாறே அரபுக்களிடம் காணப்பட்ட மகாமாத் என்ற கவிதைத் தொகுப்புக்களை ஒத்த அமைப்பில் ஐரோப்பியர் கவிதைகள் அமைந்திருந்தன. குறிப்பாக கற்பனையாக எழுந்த இலக்கியக் கதைகள், கவிதைகள் அவர்கள் மத்தியில் பரவிக்கிடந்தன.

வாண்டி என்ற ஐரோப்பியக் கவிஞர் அரபு இலக்கியத்தில் அபார ஈடுபாடு காட்டினார். அவர் இஸ்லாமிய நாகரீகத்தின் வளர்ச்சியின் போது செசிலித்தீவில் வாழ்ந்தவர். அவரது எழுத்துக்கள் இப்னு அரபி என்ற அரபுக்கவிஞனின் கவிதைகளுக்கு ஒப்பானதாக இருந்ததாக குறிப்பிடுகின்றனர். மட்டுமின்றி, அவர் இஸ்ரா - மி.ஃ.ராஜ் மற்றும் மறுமை நாள் பற்றிய நம்பிக்கையிலும் கவரப்பட்டிருந்தார்.

அப்படி பார்க்கின்ற போது ஐரோப்பாவின் மத்திய காலப்பகுதியில் அரபு மொழியின் செல்வாக்கை குறைத்து மதிப்பிட முடியாததாகும் அத்தோடு அரபு மொழியின் பல சொற்கள் ஐரோப்பிய நடைமுறையில் இன்னும் காணப்படுவதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். உதாரணம்: **المسك، القطن، كحل، زعفران ، شراب**

இங்கு மேற்கின் கருத்தில் காணப்படும் இஸ்லாத்தின் செல்வாக்கு பற்றி சுருக்கமாகத் தரப்படுகின்றது.

## கணிதவியல்

கணிதத்தில் பொதுவாக கேத்திர கணிதம், அகூரகணிதம் போன்ற கணிமுறைகளை அறிமுகப்படுத்திய முஸ்லிம்கள் பூஜ்யத்திற்கு அர்த்தம் கொடுத்தனர். அல்ஜப்ரா என்ற கணிதமுறையை அறிமுகப்படுத்தி அறிஞர் குவாரிஸ்மி அவர்கள்தான் பூஜ்யத்திற்கு அர்த்தம் தந்தவர். இவரது முயற்சியினால் எண்களின் ஒழுங்கமைப்பு (1,2,3,4) முதலில் அரேபியர்களிடமும் பின்னர் ஐரோப்பியர்களின் அன்றாடப்பாவனைக்கு வந்தது. இன்றுவரை நடைமுறையில் இருப்பது இஸ்லாத்தின் செல்வாக்கைப் பரைசாட்டப்போதுமானதாகும்.

12-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தின் இவரது பல நூல்கள் மொழியாக்கம் செய்யப்பட்டன. குறிப்பாக அல்ஜெப்ரா கேத்திர கணித நூலான الجبر والمقابلة என்ற நூல் முக்கிய இடத்தை வகிக்கின்றது. அது கி.பி பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை ஐரோப்பிய பல்கலைக்கழகங்களில் போதிக்கப்பட்டது என்பது மற்றொரு அம்சமாகும்.



**வானியல்.** விண்ணின் இயக்கம், நச்சத்திரங்கள், கோழங்கள் போன்றவற்றின் ஓட்டங்கள், அசைவுகள், நகர்வுகளுடன் தொடர்புடைய ஆராய்ச்சிக்கு வானியல் எனப்படுகின்றது. அல்குர்ஆனின் கட்டளைக்கு அமைவாக இத்துறையில் ஈடுபட்ட முஸ்லிம்கள் கிரேக்க, பாரஸீக, இந்திய நூல்களின் துணை கொண்டு இவற்றில் ஈடுபட்டனர். அவற்றின் மீது மாத்திரம் தங்கி இருக்காது மனித இனத்திற்கு பயனுள்ள தமது பல கண்டுபிடிப்புக்களையும் இதில் அதிமாக இணைத்துஅதை விரித்தி செய்தனர். கலீ.்.பா அபூஜ.்.பர் அல்மன்சூரின் காலத்தில் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட நட்சத்திரங்கள் பற்றியஇருநூல்கள் அரபிக்கு மொழியாக்கம் செய்யபட்டன. சந்திர கிரகணத்தை தெளிவுபடுத்தும் அரபு கையெழுத்துப்பிரதி ஒன்றின் நகல்

---------------------

**1- سورة الرحمن آية رقم: 33 2- علي بن نائيف الشحوذ . الحضارة الإسلامية بين أصالة الماضي وآمال المستقبل - (1 / 16)**

## மருத்துவம்

மருத்துவத்தில் பல அறிஞர்கள் பிரசித்தி பெற்று விளங்கினார்கள். இப்னுசீனா, ராஸி, இப்னு அந்ந.்.பீஸ், அபுல்காஸிம் அஸ்ஸஹ்ராவி, இப்னுல்பைதார், ஹுனைன் பின் இஸ்ஹாக், அப்தல்லதீ.்.ப் அல்பக்தாதி போன்றோர் பிரசித்தி பெற்று விளங்கினார்கள்.

இப்னு சீனாவின் **القانون في الطب** என்ற நூல் பதினெட்டாம் நூற்றாண்டுவரை ஐரோப்பிய பல்கலைக்கழகங்களில் பாடப்புத்தகமாகப் போதிக்கப்பட்டது பற்றி மருத்துவ உலகில் சுட்டிக்காட்டப்படுகின்றது. அவ்வாறே மற்ற அறிஞர்களின் நூல்களும் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

அரபு மருத்துவர்கள் தாவரங்கள், மூலிகைகளில் இருந்து தயாரிக்கப்பட்ட மாத்திரைகள், மிருகங்களில் இருந்து தயாரிக்கப்பட்ட மாத்தரிகைகளை உபயோகித்ததோடு அவற்றை வகைப்படுத்தியும் 600 வகையான நோய்கள், சிகிச்சை மாத்திரைகளை அறிமுகப்படுத்துவதில் அரேபியர் அபார திறமை உடையவர்களாக விளங்கினர்.

இப்னுல் பைத்தாரின் (كتاب منافع الأدوية والأغذية) என்ற நூல் ஐரோப்பிய உலகில் பல நூற்றாண்டுகள் போதிக்கப்பட்டிருப்பது அதன் செல்வாக்கை எடுத்துக்காட்டுகின்றது. (1)

அவ்வாறே இயற்பியல், மற்றும் இரசாயனவியல் போன்ற துறைகளிலும் முன்னோடிகளாக முஸ்லிம்கள் விளங்கினர். இயற்பியலில் இப்னுசீனா, ஹஸன் பின் ஹைஸம், பைறூனி போன்ற அறிஞர்கள் இதில் பிரசித்து பெற்று விளங்கினார்கள். ஜாபிரி ஹய்யான், மற்று அபூபக்கர் அல்ராஸி, இப்னுல் பைத்தார், தாவூத் அல்தாகி, பக்தாதி, இப்னுமைமூன் இரசாயனவியலில் ஆகியோர் பிரசித்தி பெற்று விளங்கினார்கள்.

## விவசாயம்

விவசாயத்தையும் அரபுக்கள் ஸ்பைனில் அறிமுகம் செய்தனர். கராம்பு, ஏலம் போன்ற விவசாயப் பொருட்களை ஸ்பைனுக்கு எடுத்துச் சென்று தரிசு நிலங்களாகக் காணப்பட்ட ஐரோப்பிய நிலத்தை பசுமையானதாக மாற்றியமைத்தார்கள்.
அரபு ஆட்சியின் கீழ் உள்ள நாடுகளில் இருந்து அரிசி, கோதுமை, கரும்பு, திராட்சை, கொய்யா, ஒரேஞ், மாதுளை போன்ற பழங்களை ஐரோப்பாவிற்கு எடுத்துச் சென்று விவசாயத்தை அறிமுகம் செய்தார்கள்.
விவசாயத்தின் முன்னேற்றம் கருதி கால்வாய்கள், குளங்கள், நீரோடைகள் போன்றவற்றை அமைத்து நீர்ப்பாசனத்திட்டத்தின் முன்னோடிகளாக விளங்கினார்கள். (1)

-------------

1- http://www.qeyamhome.net/details.aspx?pageid=1920&lasttype=2
2- ( 40/23 ) مجلة الجامعة الإسلامية

## கைத்தொழில்

கைத்தொழில் ஆடைத்தயாரிப்பு, கண்ணாடி, உலோகங்கள், வாள் தயாரிப்பு, மட்பாண்டம் தயாரிப்பு (செரமிக்) தங்கம், வெள்ளி, இரும்பு, உலோகங்களை அகழ்ந்தெடுத்தல் போன்ற தொழில் முறைகளையும் அறிமுகம் செய்தனர்.

ஸ்பைனில் உற்பத்தி செய்யப்படும் விவாசய மற்றும் பழ வகைகள் அங்குள்ள மக்களின் தேவைக்கு அதிகமானவையாக விளங்கின. (1)

## தத்துவம்

கிரிஸ்தவ உலகினால் வெறுத்தொதுக்கப்பட்ட அரிஸ்டோட்டலின் தத்துவங்களுக்கு புத்துணர்ச்சி தந்தவர்கள் முஸ்லிம் தத்துவஞானிகள் என வரலாறு புகழ்கின்றது. இப்னு ருஷ்தின் தத்தவத்தினால் கவரப்பட்ட ஐரோப்பியர் பலர் அவரது தத்தவங்களை ஐரோப்பியர் மத்தியில் வாழச் செய்தனர்.

## இஸ்லாமும் ஜனநாயகமும்

**ஜனநாயகம், மனித உரிமை, பெண்ணுரிமை, சிறுவர் உரிமை, மதச் சுதந்திரம் போன்றவற்றில்தான் மேற்கின் பெறுமானம் தங்கியிருப்பதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.**

அந்த வரிசையில் ஜனநாயகம் பற்றிய இஸ்லாத்தின் நிலைப்பாட்டை அறிந்திருப்பது இங்கு பொருத்தமாகும்.

ஜனநாயகம் என்பது மக்கள் ஆட்சி, அல்லது மக்களை மக்களால் தெரிவு செய்தல் எனக்குறிப்பிடுகின்றனர். இதற்கும் இஸ்லாத்திற்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டாலும் எதை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி அமைப்பது என்பதில்தான் பாரிய முரண்பாடு காணப்படுகின்றது.

மனிதர்கள் தமக்குள் வகுத்துக் கொள்கின்ற கொள்கைகள், கோட்பாடுகள் அல்லது மனிதர்களில் ஒரு குழு அரசியல் யாப்பை முன்வைக்க மக்கள் அதை அங்கீகரித்தால் அதை மக்களின் விருப்பத்தின் பெயரில் நடைமுறைப்படுத்துவதாகக் கொள்கின்றனர்.

அதில் கருத்துரிமை, பேச்சுரிமை, வாக்களிக்கும் உரிமை, கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் எல்லாம் வழங்கப்படுவதைக் கருத்தில் கொண்டு ஜனநாயகமே சிறந்த வழி என்றும் வாதிடுகின்றனர்.

## இஸ்லாத்தில் பார்வையில் சட்டம்

إِنِ الْحُكْمُ إِلَّا لِلَّهِ يَقُصُّ الْحَقَّ وَهُوَ خَيْرُ الْفَاصِلِينَ [الأنعام : 57 சட்டம் இயற்றும் அதிகாரம் அல்லாஹ்வுக்கு மாத்திரம் உரியதாகும். அவன்தான் சத்தியத்தை சத்தியமாக எடுத்துக்கூறுகின்றான். மேலும் அவன் தீர்ப்பாளர்களில் சிறந்த தீர்ப்பாளும் ஆவான் (1) என்ற குர்ஆனிய வசத்தின் அடிப்படையில் சிறந்த சட்டத்தை இயற்றிட அல்லாஹ்வே போதுமானவன் என்பதை உணர முடிகின்றது.

உலகில் சட்டத்தை இயற்றும் மனிதர்கள் இறை சட்டத்தை தொகுத்து மக்கள் மத்தயில் அவற்றை அமுல்படுத்துபவர்களாக இருக்கவேண்டும் என்பது இஸ்லாத்தின் கருத்துக்கோட்பாடாகும். அதன் ஊடாகத் தரப்படும் மனித உரிமைகள், பெண் உரிமைகள், சிறுவர் உரிமைகள், கருத்துரிமைகள் போன்றவை மாத்திரம்தான் மனித நலனுக்கு உகந்ததாக இருக்க முடியும் என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும்.

இங்கு அல்லாஹ்தான் சட்டத்தின் மூலம் என்பது உணர்த்தப்படுகின்றது. ஜனநாயகத்தில் அவ்வாறல்ல. மனிதனின் நிலைகள் பற்றி எவ்வித முன் அறிவும் அற்ற மனிதர்கள் சட்டம் இயற்றுணர்களாக விளங்குகின்ற போது உலகில் பல சீரழிகள் ஏற்படுகின்றது. இதை இன்று உலகம் கண்கூடாகக் காண்கின்றது.

ஜனநாயகவாதியான மனிதன் கடவுளின் கட்டளை பற்றியோ, அவனது சட்டங்கள் பற்றியோ சிந்திப்பதில்லை. மாற்றமாக உலக ஒழுங்கில் மனிதர்கள் எவ்வாறு நடக்க விரும்புகின்றனர் என்பதைக் கவனத்தில் கொண்டுதான் நடந்து கொள்வான்.

------------

1- الأنعام : آية : 57 .

(1) **أنا لا يضيرني إن قال جاري إن هناك عشرين إلها أو لا إله. إن هذا لا يخترق جيبي ولا يكسر رجلي "எனது பக்கத்து வீட்டுக்காரன் இருபது கடவுள்கள் இருப்பதாகக் கூறினாலோ, அல்லது ஒரு கடவுளுமே இல்லை என்றாலோ எனக்கு ஒன்றும் ஏற்படப்போவதில்லை. இது எனது பொக்கைட்டை கிழிக்கவோ, எனது காலை உடைத்திடமாட்டாது"** என்றாராம் தோமஸ் ஜெ.ஃப்ரிசோன் என்ற ஜனநாயக வாதி (1)

## இஸ்லாத்தில் மனித உரிமை

**இஸ்லாம் மனிதனை அதி உயர் நிலையில் வைத்து மதிக்கின்றது. போர்களத்திலும் அவனை கண்ணியமாக நடத்த வலியுறுத்துகின்றது.** தற்காப்பு, எதிரிகளை முறியடித்தல், இஸ்லாமிய மார்க்கத்தை உலகில் பரவச் செய்தல் போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாமியப் போர் முன்னெடுக்கின்றது.

இஸ்லாமிய போராளிகள் போரின் போது நடந்து கொள்ளவேண்டிய ஒழுங்குகள் பற்றிய அறிவுரைகள் வழங்கப்பட்ட முஸ்லிம் போராளிகள் போர்களத்தை நோக்கிப் புறப்படுவார்கள்.

போரின் போது முஸ்லிம் படைகள் எதிராளிகள் மீது காட்டிய கருணை, அன்பு ஆகிய பண்புகள் பற்றி இஸ்லாத்தின் எதிரிகளே பதிவு செய்துள்ளனர்.

அதே நேரம் இன்று வல்லரசு நாடுகள் தொடுக்கின்ற போரின் போது போர்க்குற்றங்களைப் புரிகின்றனர் என்பதை உலக மீடியாக்களில் காண்பிக்கப்படுகின்றன. ஆனால், முஸ்லிம் படைகளின் போரியல் பண்பாடுகள்தாம் போர்களில் வெளிப்பட்டிருக்கின்றன.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போராளிகளுக்கு பின்வருமாறு அறிவுரை வழங்குவார்கள்.

اغْزُوا بِاسْمِ اللَّهِ فِي سَبِيلِ اللَّهِ قَاتِلُوا مَنْ كَفَرَ بِاللَّهِ اغْزُوا وَلَا تَغُلُّوا وَلَا تَغْدِرُوا وَلَا تَمْثُلُوا وَلَا تَقْتُلُوا وَلِيدًا صحيح مسلم / برقم : 3261 / 3565

அல்லாஹ்வின் பெயரால், அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள். இறைநிராகரிப்பாளர்களுக்கு எதிராக போரிடுங்கள். அறப்போர் புரியுங்கள், (கனீமத் பங்கீட்டிற்கு முன்) போர்ச் செல்வங்களில் மோசடி செய்துவிடாதீர்கள், ஒப்பந்தங்களை முறிக்காதீர்கள், அங்கீனம் செய்யாதீர்கள், சிறு குழந்தைகளைக் கொல்லாதீர்கள் … (2)

இந்த வழிமுறைகளை வல்லரசுகள் போரின் போது கடைப்பிடிக்குமாக இருந்தால் போரால் ஏற்படும் பல பின்விளைவுகளை நிறுத்தி இருக்க முடியும். அது இன்றும் தொடர்கதையாகவே இருக்கின்றது.

1990 களில் ஈராக்கிற்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்ட போரில் மாத்திரம் 500.000 ஐந்து இலட்சம் குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர். போரியல் தர்மத்தை உலகுக்கு கற்றுக் கொடுக்கும் வெள்ளையரின் நவீன கால ஜனநாயகத்தின் நிலைதான் இது.

இஸ்லாத்திற்கு எதிராக போர் புரிந்தோரைக் கொலை செய்துவிடுவதுதான் வழிமுறை என்பது தப்பான கருத்தாகும். மாற்றமாக பணயக்கைதிகளை மன்னித்தல், கைதிகளுக்குப்பதிலாக கைதிகள் பரிமாற்றம் செய்தல், போன்ற உண்ணத நடைமுறை இஸ்லாத்தில் இருந்து வந்துள்ளது.

------------------------------

1- نقض الجذور الفكرية للديمقراطية الغربية للدكتور محمد أحمد علي مفتي :ص 23

2- ஆதார நூல் முஸ்லிம். ஹதீஸ் இலக்கம்: 3261 / 3565 பாடம்: தலைவர், படைப்பிரிவுகளுக்குத் தளபதிகளை நியமிப்பதும், போர் நெறிமுறைகள் குறித்து அவர்களுக்கு அவர் அறிவுறுத்துவதும்.

## நபிகள் நாயகத்தின் ஹஜ்ஜதுல் வதா மனித உரிமைப் பிரகடனம்.

ஹி. 11ம் ஆண்டு இஸ்லாமிய வரலாற்றில் முக்கிய ஆண்டாகும். அதில்தான் நபி (ஸல்) அவர்கள் முழு உலகுக்கும் முன்மாதிரியான உரிமைப் பிரகடணம் ஒன்றை விடுத்தார்கள். அவ்வாண்டுதான் அவர்கள் மரணமானார்கள். அவ்வாண்டுதான் முஸ்லிம்கள் தமது புதிய தலைவரைத் தெரிவு செய்தார்கள். அந்தப்பிரகடணத்தில் இவ்வாறு குறிப்பிட்டார்கள்.

**மக்களே அறிந்து கொள்ளுங்கள்!** இந்த தினம் எவ்வளவு புனிதமானதோ, இந்தப் பிரதேசம் எவ்வளவு புனிதமானதோ, இந்த மாதம் எவ்வளவு புனிதம நிறைந்ததோ அவ்வாறே பிறரின் இரத்தங்களும், செல்வங்களும் உங்கள் மீது -ஹராம்- முழுமையாக விலக்கப்பட்டுள்ளது. (1)

ஒரு போர் களத்தில் கற்பமான ஒரு பெண்ணை ஒருவர் அடிமையாக சிறைப்பிடித்து தனது கூடாரத்தினுள் கட்டிவைத்திருந்தார். இவரது நோக்கம் இந்தப் பெண்ணை பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்துவதாக இருந்தது. இதனை அவதானித்த நபிகள் நாயகம் அவர்கள் என்ன இவர் இந்தப் பெண்ணுடன் உடலுறவில் ஈடுபட நாடி இருக்கின்றாரா? என அங்குள்ள மனிதர்களிடம் கேட்டார்கள். அவர்கள் ஆம் ! அல்லாஹ்வின் தூதரே! என்றார்கள். எனக்கு அறிந்துதான் இதைக் கேட்டேன். இவர் இந்தப் பெண்ணுடன் நடந்து தனது வாரிசல்லாத ஒருவரை தனக்குரிய வாரிசு எனக் கூறப்போகின்றாரா? அல்லது மற்றவன் வாரிசை தனதாக்கிக் கொள்ளப்போகின்றாரா? என உரத்த குரலில் பேசி விட்டு, இவர் அவ்வாறு நடந்திருப்பின் நான் சாபம் செய்திருப்பேன். அது அவரை மண்ணறைக்குக் கொண்டு சென்றிருக்கும் எனக் கூறினார்கள். (முஸ்லிம்) (2)

இவ்வாறான மனித உரிமைகள் பேணிய மார்க்கத்தில் மனிதர்கள் தோற்றுவித்துள்ள சிந்தனைகளின் அடிப்படையில் அமைந்த கருத்துக்களை அங்கீகரிக்க வேண்டும் என்பது அவசியமில்லை. மாற்றமாக மேற்கு இவ்வாறான நிகழ்வுகளைப் பாடமாகக் கொண்டு இன்றும் மனித உரிமைகள் பற்றிப் பேசுகின்றார்கள்.

இதனால்தான் அறிஞர் கவுண்ட் லியோன் ஓஸ்ட்ரோரொக் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் லண்டன் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய மனித உரிமைகள் பிரகட உரைத் தொடர் ஒன்றில் இவ்வாறு குறிப்பிட்டாராம். **“இஸ்லாமிய சட்டமுறைமை பூரணத்துவம் மிக்கதாகவும், இன்றும் அதனைக் கற்கவர்களின் சிந்தனையைக் கவர்வதாகவும் திகழ்கின்றது. நபிகள் நாயகம் இறைத்தூதர் என்ற அசையா நம்பிக்கையின் அடிப்படையில் பெறப்பட்ட அனுமானங்களே இச்சட்ட முறைமையின் அடித்தளம்.** (3)

------------

1- 4051 صحيح البخاري ، حجة الوداع : رقم ، 

2- صحيح مسلم تحريم وطأ الحامل المسبية رقم: 2611

3- இஸ்லாமிய சட்டவியல் ஒரு சர்வதேசப்பார்வை. சீ.ஜி. வீரமந்திரி. ப:192-193.

## முடிவுரை

இஸ்லாம் அனைத்துக் காலத்திற்கும் பொருத்தமான தீர்வுத்திட்டங்களை முன்வைத்துள்ள அற்புத மார்க்கமாகும். அதன் சட்டங்கள், நெறிமுறைகள் யாவும் அகிலங்களின் அதிபதியாகிய அல்லாஹ்வின் வழிகாட்டலைப் பெற்றதாகும்.

அதில் காணப்படும் வழிமுறைகள் பற்றி அறியாதவர்கள், அல்லது இஸ்லாம் பற்றிய காழ்ப்புணர்ச்சியில் இருப்போர், இஸ்லாத்தின் மீது வேண்டுமென்றே ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களையும், விமர்சனங்களையும் முன்னெடுக்கின்றது.

மனிதர்களைப் பிரதானப்படுத்திய உலகியல் மதங்களாக அறிமுகமான யூதமதம், கிரிஸ்தவம், மற்றும் மனித சிந்தையில் உதித்த சித்தாந்தக் கோட்பாடுகள் உள்ளடக்கிய ஹிந்து மதம், பௌத்த மதம், முதலாளித்தவம், கம்யூனிஸம், ஜனநாயகம் போன்ற மதங்களாலும், இஸங்களாலும் முன்வைக்கப்பட்டுள்ள கோட்பாடுகள் பகுத்தறிவிற்கும், மனித நலனுக்கும் பொருத்தமற்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

ஜனநாயக நாட்டில் பிறந்த எடாய்லீன் என்ற பெண் கலாநிதி இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

**وقالت الدكتورة إيدايلين : ( إن سبب الأزمات العالمية في أمريكا وسر كثرة الجرائم في المجتمع هو أن الزوجة تركت بيتها لتضاعف دخل الأسرة فزاد الدخل وانخفض مستوى الأخلاق ثم قالت إن التجارب أثبتت أن عودة المرأة إلى الحريم هو الطريقة الوحيدة لإنقاذ الجيل الجديد من التدهور الذي يسير فيه**

அமெரிக்காவின் நெருக்கடிகளுக்குக்குரியகாரணமும், சமூகத்தில் குற்றச் செயல்கள் அதிகரிப்பதற்குரிய இரகசியமும் என்னவென்றால் மனைவி குடும்ப வருவாயை பெருக்கிக் கொள்வதற்காக தனது வீட்டை விட்டுவிட்டாள். வருவாய் அதிகரித்திருக்கிறது. மறுபுறத்தில் பண்பாட்டு வீழ்ச்சி ஏற்பட்டிருக்கின்றது. புதிய தலைமுறையினரை இவ்வாறான சீர்கேடுகளில் இருந்து காப்பாற்றுவதற்கான ஒரே வழி ஒரு பெண் தனக்குரிய கணவனுடன் இணைந்து வாழ்வதுதான் என்பதை அய்வுகள் உறுதி செய்துள்ளன என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். *(1)*

**وقال أحد أعضاء الكونجرس الأمريكي : ( إن المرأة تستطيع أن تخدم الدولة حقا إ ذا بقيت في البيت الذي هو كيان الأسرة**

அமெரிக்க கோங்ரஸின் உறுப்பினர்களில் ஒருவர்: குடும்பத்தின் அடிநாதமாக விளங்கும் வீட்டில் ஒரு பெண் தங்கி இருப்பாளாயின் அவள் நாட்டுக்கு உண்மையாகவே சேவையாற்ற முடியும். என்றார்.

**وقال عضو آخر : ( إن الله عندما منح المرأة ميزة الأولاد لم يطلب منها أن تتركهم لتعمل في الخارج بل جعل مهمتها البقاء في المنزل لرعاية هؤلاء الأطفال**

மற்றொரு உறுப்பினர்: அல்லாஹ் பெண்ணுக்கு குழந்தைச் செல்வத்தின் சிறப்பம்சத்தை வழங்கி இருப்பதன் மூலம் அவள் வெளியில் சென்று பணி செய்வதை அவன் அவளிடம் வேண்டிக் கொள்ளவில்லை மாறாக, அவள் வீட்டில் தங்கி குழந்தைகளை வளர்ப்பதே அவளது பாரிய பணியாகும் எனக் குறிப்பிட்டுள்ளார். (2)

அகிலங்களின் அதிபதியாகிய அல்லாஹ் இந்த முயற்சிக்காக அருளும், நற்பாக்கியமும் செய்வானாக எனப் பிரார்த்தனை செய்தவனாக...

------------------

*1*– التبرج وخطر مشاركة للشيخ : عبد العزيز بن عبد الله بن باز ( رحمه الله ) (*2*) المرأة للرجل في ميدان عمله – (*1* / *34*)

## المصادر والمراجع العربية


*1*– القرآى الكريم

*2*– البخاري ، الصحيح الجامع المسمى بصحيح البخاري

*3*– مسلم، صحيح مسلم

*4*– علي بن نايف الشحوذ . الحضارة الإسلامية بين أصالة الماضي وآمال المستقبل

*5*– مجلة الجامعة الإسلامية بالمدينة المنورة

*6*– الدكتور، محمد أحمد علي مفتي: نقض الجذور الفكرية للديمقراطية الغربية

7– ابن باز، عبد العزيز بن عبد الله بن باز التبرج وخطر مشاركة المرأة للرجل في ميدان عمله

8– حمدى شفيق، الإسلام والآخر الحوار هو الحل رئيس تحرير جريدة النور الإسلامية المصرية

9– محمد قطب ، فرق معاصرة –درا الشروق

2-http://www.qeyamhome.net/details.aspx?pageid=1920&lasttype=2

3- https://ar.wikipedia.org/wiki/

4- 2- http://uqu.edu.sa/page/ar/175797

**தமிழ் நூல்கள்:**

1- சீ.ஜி. வீரமந்திரி, இஸ்லாமிய சட்டவியல் ஒரு சர்வதேசப்பார்வை. ப:192-193.

**‘மருத்துவத்துறையில் எழுதப்பட்ட மற்ற நூல்களை விடவும் இப்னு சீனாவின் கானூன் புத்தகமானது நீண்ட காலங்கள் வாழ்ந்துள்ளது. பதின் ஆறாம் நூற்றாண்டின் பின் வந்த முப்பது ஆண்டுகளில் ஐந்து தடவைகளுக்கும் அதிகமாக அது அச்சிடப்பட்டுள்ளது. மேற்கத்தேய அறிஞர்கள் கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டு தொடங்கி, கி.பி பதினேழில் அதன் உச்சத்தை தொட்ட அறிவியல் ஆராய்ச்சிப்புரட்சிக்கு இப்னு சீனா வித்திட்டார்’**

கலாநிதி ஓஸ்லர் الإسلام والآخر الحوار هو الحل

**அறிவும் பண்பாடும் என்னை ஆள வேண்டும் என்ற உயர் நோக்கில் இறைபோதனைகளை எனக்கு போதித்த என் பெற்றோர், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், மற்றும் என் உயர்வுக்கும் முன்னேற்றத்திற்கும் காரணமாக இருந்த அனைவருக்கும் அல்லாஹ் இம்மையிலும் மறுமையில் நற்பாக்கியம் அளிப்பானாக என்று அவனை என்றும் உள்ளத்தால் இறைஞ்சுகின்றேன்.**

மாணவர் பெயர்: எம். ஜே. எம். ரிஸ்வான்

பதிவு இலக்கம்: HD/ MA/ 08-09-/559

விரிவுரையாளர் : எம். ஐ. எம். ஜஸீல் (PHD)

(அரபு இஸ்லாமிய நாகரீகத்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)

eBook by: www.islamkalvi.com